**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**

**முன்னிலை - திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு ஏப்ரல் 05ம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண்.2/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 45/2024**

1. K.சிவசந்திரன்

2. M.குழந்தைவேலு ...... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**/ எதிர் /**

முதன்மை மேலாளர்

ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா, மானாமதுரை ...... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என்முன்பு 04.04.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாராா்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கருப்பையா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரின்மையாலும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டுள்ளநிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 9 ரூல் 7 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி 05.08.2024ம் தேதியன்று மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட Exparte உத்தரவை ரத்து செய்து தாவா வழக்கை நடத்திட அனுமதியளிக்க வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் கடந்த 05.08.2024ம் தேதியன்று சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும் அன்றையதினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்றும் மேற்படி வழக்கில் தங்களுக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும் மேற்படி ஒருதலை பட்ச உத்தரவை ரத்து செய்து தனது தரப்பு சான்றாவணம் மற்றும் சாட்சியங்கள்

ஆகியவற்றை விசாரித்து இறுதி முடிவு ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாக உள்ளது என்றும் எனவே அசல் வழக்கில் 05.08.2024ம் தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்களால் மனு தாக்கல்.

**3.** எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரின்மையாலும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :-**

மனுதாராரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார். எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஏப்ரல் 05ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.05 10:48:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.05 10:48:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.2/2024**
**in**
**OS. No.45/2024**

**Dated: 05.04.2025**